1987 நவம்பர் 17]

பெண்களை முதலாவது போட்டுக்கொண்டு, மதுரை காமராசர் பல்கலைக்கழக மாணவர்கள், 90 விழுக்காடுக்கும் அதிகமாகவே மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும் அவர்களைக் கடைசியிலேயே வைத்து மதிப்பீடு செய்வதாக, பல்வேறு மாணவர்களிடமிருந்து புகார்கள் வருகின்றன. இப்படி தமிழகத்திற்குள்ளேயே இருக்கிற பல்கலைக்கழகங்கள் ஒன்றுக்கொன்று தரம் பிரித்துப் பார்த்துக் கொண்டிருப்பதால் பல்வேறு மாணவர்கள் பாதிக்கப் படுகிறார்கள். அந்த நிலையில்லாது, எல்லாப் பல்கலைக் கழகங்களின் மதிப்பெண்களையும் சரிசமமாக மதிப்பிடுகிற தன்மையை உண்டாக்க அரசாங்கம் பல்கலைக்கழகங்களை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி.பி.எ.-வைப் பொறுத்தவரைக்கும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் இருக்கின்ற ஒரு பாடத்திட்ட மாகும். ஆங்கு மதிப்பீடு செய்கிற பணி அந்தப் பல்கலைக் கழகத்தைச் சேரும், மற்ற பல்கலைக்கழகங்களுக்குத் தொடர்பு இல்லை. ஆனால் எம்.பி.எ. என்று வருகிறபோது, மேல்படிப்பு வருகிறபோது, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரைக்கும் அங்குதான் அதிகப்படியான மதிப் பெண்களை மாணவர்கள் பெறக்கூடிய அளவிற்கு நடைமுறையில் அணுகுமுறை இருப்பதாகக் கூறப்படுகிறது. அங்குதான் அவர்கள் 'Valuation should be made stricter' என்ற நிலையை அவர்கள் எடுக்கவேண்டும் என்று மற்ற பல்கலைக் கழகங்கள் கூறிக்கொண்டிருக்கின்றன. துணை வேந்தர்களுடைய மாநாட்டில் இதுகுறித்து பேசப்பட்டது. ஒரு குழு அமைக்கப் பட்டிருக்கிறது. விரைவில் அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப் படும்.

ஆயுள் தண்டனையை குறைத்தல்.

158—(*வினா எண் 15223)—திரு. கே. சுப்பராயன்: மாண்பு மிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயுள் தண்டனை என்பதை 10 ஆண்டுகளாக மாற்றி அமைக்க சட்டத் திருத்தம் செய்ய மத்திய அரசை மாநில அரசு கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, உணர்ச்சிவசப்பட்ட நிலையிலும், சந்தர்ப்ப சாட்சியங்களின் அடிப்படையிலும் பல நிரபராதிகள் தண்டிக்கப்பட்டு இன்றைக்கு சிறைச்சாலைகளிலே இருந்து வருகிறார்கள். வளர்ந்துவருகிற இன்றைய நாகரிக வளர்ச்சிக்கொப்ப ஆயுள் தண்டனை என்பதை 10 ஆண்டுக்காலமாக குறைக்க வேண்டுமென்பதை மத்திய அரசுக்கு தொடர்ந்து மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18-12-1978 அன்று மைய அரசு கொண்டு வந்த மையச் சட்டத்தின் அடிப்படையில் 14 ஆண்டுகளுக்கு மேலே சிறையில் இருக்கின்றவர்களை விடுதலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. இதை மாற்றியமைக்க சட்டப் பேரவையிலே நாம் ஒரு நடவடிக்கையை மேற்கொண்டு மைய அரசுக்கு, அந்தச் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று நாம் கேட்டோம். அவர்கள் மறுத்து விட்டார்கள். தொடர்ந்து அதை நாம் வலியுறுத்துவோம்.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 10 ஆண்டு காலத்திற்குமேல் சிறையிலே இருந்து வருகிற கைதிகள் எத்தனை பேர் என்று அறிய விரும்புவதோடு, மாநில அரசு தன்னுடைய அதிகார எல்லைக்குள்ளே நின்று மனிதாபிமான அடிப்படையிலும் மிகுந்த பரிவுணர்ச்சியோடும் அவர்களிடம் மனுக்களைப்பெற்று, முன் விடுதலை அடிப்படையில் முன்விடுதலை செய்வதற்குரிய நியாயமான முறையீடுகளை பரிவோடு பரிசீலித்து முன்விடுதலை செய்ய அரசு முன் வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும். எத்தனைபேர் 10 ஆண்டுகளுக்குமேல் சிறையில் இருக்கிறார்கள் என்ற தகவல்கள் தற்போது என்னிடத்தில் இல்லை.

1987 நவம்பர் 17]

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயுள் தண்டனை 14 ஆண்டுக்காலம் ஒருவருக்கு கொடுக்கப்பட்டால் அவர் எவ்வளவு காலம் சிறையில் இருக்க வேண்டும்? அவர்களுக்கு நன்னடத்தையின் அடிப்படையில் தலைவர்களுடைய பிறந்த நாள் போன்ற சலுகைகளினுடைய அடிப்படையில் குறைந்த பட்சம் அவர்கள் எவ்வளவு நாட்கள் சிறையில் இருக்கிறார்கள் என்கிற தகவல்களை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1978-க்கு முன்னால் சிறைக்குச் சென்ற கைதிகளாக இருப்பார்களென்றால், அவர்கள் 14 ஆண்டுகள் குறைந்த பட்சம் இருக்கவேண்டிய சூழல் வரும். ஆனால் 10 ஆண்டுகளுக்குமேல், சூழல் காரணமாக, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் கூறியதைப்போல், மனிதாபிமான அடிப்படையில் சிலரை அதற்கு முன்னரே விடுதலை செய்யக் கூடிய வாய்ப்பு அங்குள்ள அட்வைசரி போர்டுக்கு இருக்கிறது. ஆனால் குறைந்தபட்சம் 14 ஆண்டுகாலம் இருக்க வேண்டும். தற்போது, 1978-க்குப் பிறகு, மைய அரசு கொண்டுவந்த சட்டத்தின் அடிப்படையில், 14 ஆண்டுகள் குறைந்த பட்சக் காலம் முழுமையாக இருந்தாகவேண்டும். அதாவது விடுப்பு போன்றவைகளெல்லாம் நீங்கலாக 14 ஆண்டுக்காலம் இருக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயுள் கைதிகளும் தேர்தலிலே நிற்கலாம் என்ற ஒரு சட்டத் திருத்தம் செய்து மத்திய சர்க்காருக்கு, மாநில அரசு சிபாரிசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அரசு செய்யாது.